செய்தி வெளியீடு எண்:388 நாள்: **12.03.2022**

# இராணிப்பேட்டையில் நடைபெற்ற மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

**தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்கள் வேலைநாடுநர்களும் வேலையளிப்பவர்களும் நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் ஒரு இணைப்பு பாலமாக செயல்படுகிறது. மேலும் இவ்வாறான முகாம்கள் வேலைநாடுநர்கள் அவர்களின் தகுதிகள் மற்றும் திறன்களை அறிந்து அதற்கேற்ப அவர்களை தயார் செய்துகொள்ளவும் உதவுகிறது. முகாம் நடைபெறும் நாளிலேயே பணி நியமனம் பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படுவது இதன் தனி சிறப்பாகும்.**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பாக ஆகஸ்டு 2021 முதல் டிசம்பர் 2021 வரையிலான காலத்தில் 34 பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. அவற்றில் பங்கேற்ற வேலையளிப்பவர்களின் எண்ணிக்கை 3,992, பங்கேற்ற வேலை நாடுநர்களின் எண்ணிக்கை 1,97,995 தேர்வு செய்யப்பட்ட வேலை நாடுநர்களின் எண்ணிக்கை 32,560 ஆகும்.**

**இதன் தொடர்ச்சியாக 35-வது பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், இணைந்து படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைபெறும் நோக்கில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் திறன் பயிற்சிக்கான ஆள்சேர்ப்பு முகாம் 12.03.2022 சனிக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இராணிப்பேட்டை The Geekay World பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.**

**இம்முகாமில் 26,641 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். மேலும், இம்முகாமில் 170 தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் 5 திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்துகொண்டனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் 4,022 வேலைநாடுநர்கள் பணி நியமனம் பெற்றனர். இவற்றுள் 86 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்கள் பணி நியமனம் பெற்றனர். மேலும் திறன் பயிற்சிக்கு பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 367 ஆகும்.**

இம்முகாமில் சிறப்பு விருந்தினராக சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பணிநியமனம் பெற்ற வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்களும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இத்தகவலை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை -9